முதன்மை மாவட்ட நீதிமன்றம், கடலூர் மாவட்டம், கடலூர்.

LAOP 28/2023

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 06ஆம் நாள் கோ.த.சா.1–ன் வாக்குமூலம்

இந்திய உறுதிமொழிச்சட்டம் (44/1969)–ன் விதிமுறைகளின்படி முதன்மை மாவட்ட நீதிபதி திருமதி.ஜி.சுபத்திரா தேவி, எம்.எல்., அவர்களால் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | முகமது அலி | வயது | : | 70 |
| தந்தை/கணவர் பெயர் | : | பக்கீர் முகமது | தொழில் | : | |
| கிராமம் | : | | ஜாதி | : | |
| தாலூக்கா | : | | சமயம் | : | |
| மாவட்டம் | : | கடலூர் | | : | |

**எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை :**

என்னுடைய இடத்தினை நெடுஞ்சாலைத்துறையில் உள்ளது. என்னுடைய இடத்திலிருந்து 1 ஏக்கர் நிலம் எடுத்துள்ளார்கள். எனது இடத்தின் சர்வே எண் 32/2– பி, 2– சி. நிறைய இடத்தினை எடுத்துக்கொண்டு குறைவான இடத்தினை எடுத்தது போல் கணக்கு காண்பித்துள்ளார்கள். ஆர்ஜீதம் செய்தது போக மீதி என்னுடைய நிலத்தினை எல்லை பிரித்து குறித்து காண்பிக்க வேண்டும். என்னுடைய நிலத்தினை நான் அனுபவம் செய்து வந்த நிலையில் FMB ல் சிறு பிழையுள்ளது. FMB ல் குறைவாக ,இருந்துள்ளது. RDO மூலம் 10 வருடங்களாக அலைந்து சரி செய்து கொடுத்துள்ளேன். அதன் பிறகு நெடுஞ்சாலைத்துறையில் DRO 1 கோடி 20 லட்சம் எனக்குசேர வேண்டிய பணத்தினை நான் யாரிடம் கிரையம் வாங்கினேனோ அவரின் கணக்கில் போட்டுவிட்டார்கள்.

நான் கடலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பழைய FMB ல் உள்ளது போல் மாற்றி கொடுங்கள் என்று HighWay DRO கேட்கிறார். பணத்தினை எதிர் தரப்பில் போட்டதால் எதுவும் செய்யமுடியாமல் ரோடு வேலை செய்வதில் தொய்வு ஏற்பட்டுள்ளது என்றும், ரோடு போட இயலாமல் உள்ளதால் பழையபடி மாற்றி கொடுத்தால் ரோடு போட்டுவிடுகிறோம் என்றும் பிறகு மாற்றி கொடுத்தது போல் மீண்டும் ஒரு முறை மாற்றி கொடுக்கிறேன் என்று சத்திய பிரமாணம் செய்து மாவட்ட ஆட்சியரிடம் வேண்டுகோள் வைக்கிறார்கள். HighWay DRO வை கேட்கும்போது அவர் மாறிவிட்டார், அவரை போய் கேளுங்கள் என்று சொல்கிறார்கள். அந்த நிலையில் உள்ள புது HighWay DRO வை தான் நான் கேட்க முடியும். பணத்தினை நான் வாங்கவில்லை என்று நீதிமன்றத்தில் செலுத்தி விட்டேன் என்றும் வழக்கு உள்ளதால் உத்திரவுக்கு பிறகு அங்கு போய் வாங்கி கொள்ளுங்கள் என்றும் அதற்குள் FMB ல் மாற்றி கொடுக்கிறேன் என்று சொல்கிறார்கள். என் நிலத்தினை எடுத்துக்கொண்டு சரியான முறையில் எனக்கு பதில் அளிக்காமல் கோர்ட்டில் வழக்கு இருப்பதாக சொல்லி அலைக்கழித்து வருகிறார்கள். எனது நிலம் மெயின் ரோட்டில் உள்ளது 2012 ல் பிளாட் போட முயற்சி செய்தேன். சதுரடி ரூ.500 அரசாங்க மதிப்பு. 12 வருடம் கழித்து HighWay ரூ.300 தான் மதிப்பு சொல்கிறார்கள். அதுவும் un approved என்பதால் 33 % குறைத்துக்கொள்வோம் என்று சொல்கிறார்கள். அந்த இடம் தற்போது மெயின் ரோட்டினை ஒட்டி உள்ளதால் சதுரடி ரூ.3500 க்கு

தற்போது விற்பனை போய்கொண்டிருக்கிறது. அதனால் எனக்கு உள்ளவாறு FMB ல் மாற்றி கொடுக்க கேட்டுக்கொள்கிறேன்.

மேலே சொன்ன சர்வே எண்ணுக்கு மாறாக பிரமாண வாக்குமூலத்தில் சர்வே எண் 33/2 பி, 2 சி என்று உள்ளது என்றால் எனக்கு 70 வயதாகிவிட்டது. என்னுடன் வந்திருக்கும் என் மகனுக்கு விவரம் தெரியும். அவரையும் சாட்சியாக விசாரிக்க போகிறேன். 33/2 பி, 2 சில் எனக்கு எவ்வளவு இடம் இருந்தது என்பதும்அ தில் எவ்வளவு எடுத்துள்ளார்கள் என்பதும் என் மகனுக்குத் தெரியும். மேற்படி சொத்து என் பெயரில் இருந்ததற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேன். எத்தனையாவது ஆவணம் என்று தெரியாது. என் இடத்தின் FMB தவறாக இருந்தது என்பதற்கு திருத்தம் செய்து வாங்கிவந்தேன். அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். எல்லா விவரங்களும் என் மகனுக்கு தான் தெரியும் என்று நான் சொல்வதால் எனது பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்களை ஏற்றுக்கொள்ள முடியாது என்றால் சரியல்ல. என் இடத்தினை National Highway ல் தான் எடுத்தார்கள்.

வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.